**பொலொன்னறுவ மாவட்டத்தின் 13 கமநல சேவை செயற்குழுக்களின் - 2022**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** பொலொன்னறுவ மாவட்டத்தின் 13 கமநல சேவை செயற்குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசெயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்கள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 2000 இன் 46 கொண்ட கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58 (1) ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2023 ஜுலை 11 திகதியளவில் 2022 ஆண்டிற்குரியதாக பொலொன்னறுவ மாவட்டத்தின் 13 கமநல சேவை செயற்குழுக்களில் நிதிக்கூற்றுக்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன், அவ் வறிக்கைகளில் 02 செயற்குழுக்களின் அபிப்பிராயம் மறுப்பு, 11 செயற்குழுக்களின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தன. அபிப்பிராயத்திற்கு காரணமாகியிருந்த பொருன்மையான தவறுகள் பின்வருமாறு.

**1.3 நிதிக்கூற்றுக்கள்.**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமநல சேவை ஆணையாளரின் 2017 பெப்ரவரி 7 திகதிய இலக்கம் 15/2016 கொண்ட சுற்றறிக்கையின் விடயங்கள் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கும் போது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டிய போதும், மீளாய்வாண்டில் கணக்குகள் பற்றிய சான்றிதழில் மற்றும் நிதிக்கூற்றுக்களில் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பித்ததாக 13 கமநல சேவை செயற்குழுக்களின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளன. | எதிர்காலத்தில் சரிசெய்வதெென. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | 07 கமநல சேவை செயற்குழுக்களின் மூலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் தேவைப்பாடுகளை கவனத்திற் கொண்டு நிதிக்கூற்றுக்களில் ஒவ்வொறு ஆதன பொறிகள் மற்றும் உபகரணத் தரம் தொடர்பான கிரயம், பயனுள்ள ஆயுட்காலம் காலப்பகுதி ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் திரண்ட பெறுமானத் தேவை வெளிப்படுத்தி இருக்கவில்லை. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 02 கமநல சேவை செயற்குழுக்களின் மூலம் சொத்துக்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தில் பின்பற்றிய பெறுமானத் தேய்வுக் கொள்கையை நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதென. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 08 செயற்குழுக்களின் மூலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இல் குறிப்பிட்டுள்ள கிரயத்தை இனங்காணும் பிரமாணங்களை கவனத்திற் கொண்டு ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் அதிகரிப்பதனை இனங்காண வேண்டிய போதும், ரூபா 5,574,207 பெறுமதியுள்ள சொத்துக்களை சுவீகரித்தலை நடைமுறையல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்வதென. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 08 கமநல சேவை செயற்குழுக்களிற்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் வழங்கியிருந்த சேதனப் பசளை துண்டாக்கும் இயந்திரங்களின் கிரயத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் அதற்குரிய தகவல்களை பெற்றுக் கொண்டு சரிசெய்வதென. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 06 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 747,968 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் அவை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 9 இன் தேவைப்பாடுகளை கவனத்திற் கொண்டு இருப்பு தொடர்பான அனைத்து நட்டங்களும் அந்த நட்டங்கள் இடம்பெறும் காலப்பகுதியின் செலவாக இனங்காண வேண்டிய போதும் 06 செயற்குழுக்களில் கடந்த ஆண்டுகளில் காலாவதியாகி இருந்த கிரயம் ரூபா 1,328,937 ஆன இருப்பு தொடர்பாக அதன் பிரகாரம் கணக்கீடு செய்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/5/12/ii மற்றும் 2022 ஜுன் 01 திகதிய கடிதம் பிரகாரம் காலம் கடந்த இருப்புக்களை புத்தகங்களில் இருந்து பதிவழித்ததென. | அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளவாறு நிறுவனமொன்றின் செயற்பாடு மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சலின் பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் எடுத்துக் காட்ட வேண்டிய போதும், 04 செயற்குழுக்களில் ரூபா 2,633,353 ஆன செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்கள் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் தேவைப்பாட்டை கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மணம்பட்டி கமநல சேவை செயற்குழுவினால் கூட்டுப் பெறுமதி ரூபா 1,891,509 ஆன விதை நெல் மற்றும் விவசாய இரசாயன பொருட்கள் திரும்பி அனுப்பும் கடன்கொடுனர் கணக்கை வரவு வைக்காது கொள்வனவு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | திரும்பி அனுப்பும் கணக்கை செலவு வைத்து கடன்கொடுனர் கணக்கை வரவு வைத்து காட்ட வேண்டும். |
| (எ) | சிறிபுர கமநல சேவை செயற்குழுவின் மூலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இல் காட்டியுள்ள கிரயத்தை இனங்காணும் பிரமாணங்களை கவனத்திற் கொண்டு கட்டிடம் மற்றும் தந்தப்பேழை பெட்டியின் கிரயம் மற்றும் வருடாந்த பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதெனை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க வேண்டும். |
| (ஏ) | சிறிபுர கமநல சேவை செயற்குழுவினால் ரூபா 89,605 ஆன கருத்திட்ட நிறுத்தற்பணம் நிதிக்கூற்றுக்களில் எடுத்துக் காட்டப்படவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | கடப்பாடு, பொறுப்புக்களை நிதிக்கூற்றுக்களில் எடுத்துக் காட்டப்பட வேண்டும் |
| (ஐ) | மெதிரிகிரிய கமநல சேவை செயற்குழுவினால் கணக்காண்டு இறுதியில் நடைமுறை சொத்துக்கள் ரூபா 335,576 தொகை மற்றும் நடைமுறை பொறுப்புகள் ரூபா 134,230 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | மெதிரிகிரிய கமநல சேவை செயற்குழுவினால் செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 1,382,023 ஆன கொடுப்பனவுகளை நிதி நடவடிக்கையின் கீழ் காண்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | மெதிரிகிரிய கமநல சேவை செயற்குழுவினால் அனைத்து | எதிர்காலத்தில் சரிசெய்ய | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | வருமானங்களையும் அட்டுறு கணக்கீட்டு அடிப்படையில் இனங்காண்பதாக நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்த போதும், பணமாக கிடைத்த நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 992,253 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டி இருந்தது. அறிக்கையிடல் காலப்பகுதியினுள் ஈட்டிய வட்டி வருமானத்தை இனங்காண்பதற்கு அதற்குரிய வங்கிக் கூற்று மற்றும் வட்டி விகிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுப்பதென. | சம்பவங்களை அவை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (க) | பகமூன கமநல சேவை செயற்குழுவின் 2021 திசெம்பர் 31 திகதியன்று அலுவலக உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 562,780 ஆன போதும், 2022 சனவரி 01 திகதியன்று மீதி ரூபா 421,149 ஆகவும், 2021 திசெம்பர் 31 திகதியன்று கணனி உதிரிப்பாகங்களின் தேறிய பெறுமதிப்பு ரூபா 105,287 ஆன போதும், மீளாய்வாண்டு ஆரம்பத்தில் அது ரூபா 131,754 ஆகவும் நிதிக்கூற்றுக்களிற்க எடுக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | வித்தியாசத்திற்கு காரணமான செம்மையாக்கல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கமநல சேவை செயற்குழுக்களினால் 02 பேரேட்டுக் கணக்குகளிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீதிகள் மற்றும் நேரொத்த அறிக்கைகள் பிரகார மீதிகளிற்கிடையில் கூட்டுப் பெறுமதி ரூபா 637,212 ஆன இணக்கமிக்மை ஒன்றானது. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுப்பதென. | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெறுமானங்கள் அதற்கு நேரொத்த அறிக்கை பிரகாரம் சமப்பட வேண்டும். |

**1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பகமூன கமநல சேவை செயற்குழுவின் 2022 ஆண்டு திசெம்பர் மாதம் கூட்டுத் தொகை ரூபா 3,375,505 ஆன 113 கொடுப்பனவு வவுசர்களிற்காக உறுதி செய்யும் அலுவலரினால் (பிராந்திய அலுவலர் / நிறைவேற்று செயலாளர்) உறுதி செய்யாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | நிறைவேற்று செயலாளரினால் தற்போது கொடுப்பனவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதென | நிதிப் பிரமாணம் 138 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.3.5 கணக்காய்விற்காக எழுத்து மூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 06 கணக்கு விடயங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 77,732,586 தொகைக்கான உறுதிப்படுத்தற் கடிதம், மீதி உறுதிப்பாடுகள், குறித்த அட்டவணைகள் இல்லாத காரணத்தால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | சீராக்க நடவடிக்கை எடுப்பதென. | சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகிறது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 104,105 | மனம்பிட்டிய கமநல சேவை செயற்குழுவினால் ரூபா 67,832 ஆன நெல் இருப்பு பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசாரணையை நடாத்தி மேலதிக நடவடிக்கை மேற்கொள்வதென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள் | | | |
| (i) | 1992 ஆகஸ்ட் 3 ஆம் திகதிய இலக்கம் 0439/93(7/3/5/4) கொண்ட சுற்றிக்கை | மனம்பிடிய கமநல சேவை செயற்குழுவினால் ஏக்கர் வரி வருமானத்திலிருந்து 20 சதவீதம் அளவொன்றை கமநல அபிவிருத்தி ஆணையாளரிற்கு அனுப்ப வேண்டிய ரூபா 164,546 இனை 22 ஆண்டு காலமாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 7/5/12/II மற்றும் 2022 ஜுன் 01 கடிதம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2012 பெப்ரவரி 29 திகதிய இலக்கம் 4/2012 கொண்ட கமநல வங்கி சுற்றிக்கை 4.1 பிரிவு | பகமூன கமநல வங்கியின் 2022 ஆண்டினுள் ரூபா 1,591,575 ஆன கடன் செலுத்துதல் கடன் கட்டப்பாட்டு குழுவின் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு கமநல சேவை பிராந்திய அலுவலர்/ கடன் கட்டப்பாட்டு குழுவின் செயலாளரினால் உறுதிப்படுத்தப்படவில்லை | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | கமநல சேவை அபிவிருத்தி ஆணையாளரின் 2019 ஏப்ரல் 24 ஆம் திகதிய கம.அபி.வழி5/4பொது 2019 கொண்டு கடிதம் | கமநல வங்கியில் கையிருப்பில் வைத்திருக்க முடியுமான உச்ச பண எல்லையை விஞ்சி 03 கமநல வங்கிகளில் 224 சந்தர்ப்பங்களில் பணம் கையிருப்பில் வைக்கப்பட்டடிருந்தன. | பல காரணங்களினால் இவ்வாறு நிகழ்ந்ததாகவும், அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் குறிப்பிட நடவடிக்கை எடுப்பதென | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளர்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2022 ஆண்டில் 12 கமநல சேவை செயற்குழுக்களின் கூட்டுத் தொகை ரூபா 17,651,062 ஆன மிகையொன்றும், ஒரு கமநல சேவை செயற்குழுவின் ரூபா 25,945 ஆன பற்றாக்குறையும் ஆனது. முன்னைய ஆண்டு 12 கமநல சேவை செயற்குழுக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 15,540,216 ஆன மிகையொன்றும், ஒரு கமநல சேவை செயற்குழுவின் ரூபா 549,288 ஆன பற்றாக்குறையும் ஆனது.

### 2.2 பகுத்தாய்வு ரீதியான மீளாய்வு

#### 2.2.1 வளர்ச்சி

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 07 செயற்குழுகளின் நிதி விளைவு கூட்டு பெறுமதி ரூபா 7,560,041 ஆன வளர்ச்சியொன்று காணப்பட்டது. இந்த வளர்சிற்கு நிவாரண யூரியா பசளை விற்பனை வருமானம் அதிகரித்தல் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

#### 2.2.2 வீழ்ச்சி

06 செயற்குழுகளின் கூட்டு பெறுமதி ரூபா 4,925,851 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிதி விளைவு வீழ்ச்சியடைய ஏனைய பசளை வருமானம் குறைந்தமை, விதை நெல் விற்பனை வருமானம் குறைந்தமை, சம்பளம் மற்றும் படிகள் செலவு அதிகரித்தல், காகிதாதி செலவுகள் அதிகரித்தல் போன்ற விடயங்கள் பிரதான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவை செயற்குழுவில் முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,132,873 பெறுமதியான விவசாய இரசாயனம், காலாவதியாகியிருந்தது. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | காலாவதியான இருப்பு தொடர்பாக பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஆ) | 02 செயற்குழுக்களில் தகாத பசளை உபயோகம் காரணமாக நான்கு அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 291,279 தொகை அறவிடப்பட்டிருக்வில்லை. | குறித்த அலவலர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதென | நிதிப்பிரமாண ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மனம்பிட்டிய கமநல சேவை செயற்குழுவில் 2018 சிறு போக பயிர் சேதங்களிற்கான கொடுப்பனவிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,064,375 தொகையை உரிய விவசாயிகளிற்கு செலுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படடிருக்கவில்லை. | விவசாயிகளை அடையாளம் கண்டு செலுத்த அல்லது திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதென. | துரிதமாக தீர்க்க வேண்டும். |
| (ஈ) | மெதிரிகிரிய கமநல சேவை செயற்குழுவினால் 2005 ஆண்டில் கொள்வனவு செய்து அறைத்து ஒப்படைக்க ஆலை உரிமையாளர் ஒருவரிற்கு வழங்கிய நெற்களிற்காக அரிசி வழங்கப்படாமை காரணமாக அந்த ஆலையுரிமையாளரிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 1,563,278 ஆனது. | குற்றவழியான ஆலையுரிமையாளர் மரணித்து வழக்கு முடிவுறுத்தப்பட்டுள்ளது. கமநல சேவை ஆணையாளரின் 7/5/12/ii மற்றும் 2022 ஜுன் 01 திகதி கடிதத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதென. | தீர்த்தக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | ஹிங்குரக்கொட கமநல சேவை செயற்குழுவில் போலியான தகவல்கள் உள்ளடங்கிய வவுசர் பத்திரங்களை தயாரித்து கட்டிட திருத்த நடவடிக்கைக்காக ரூபா 176,000 தொகை ஒப்பந்ததாரரிற்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்திய தொகையை தவணையாக கமநல சேவை செயற்குழவிற்கு அறவிடப்பட்டுவருகிறது. | நிதிப்பிரமாணம் 105 இன் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஊ) | புலஸ்திகம கமநல சேவை செயற்குழுவின் 5 ஆண்டுகள் அளவு காலமாக தொழில்படு பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்த தேறிய பெறுமானங்களின் கூட்டுத் தொகை | எதிர் காலத்தில் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுப்பதென. | பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 247,876 ஆன 03 சொத்து உருப்படிகள் நிலவின. | | |
| (எ) | கல்அமுன கமநல சேவை செயற்குழுவினால் 2021 ஆண்டின் போது ரூபா 149,445 செலவில் உற்பத்தி செய்யப்பட்ட கி.கி.5000 பசளைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சேதனப் பசளையிற்காக போதியளவு கேள்வி இல்லாதமையால் விற்பனை செய்ய முடியவில்லையென. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | கல்அமுன கமநல சேவை செயற்குழுவினால் பொருட் பதிவேடுகளிற்கு உட்படுத்தி இருக்காத நெல் அரைக்கும் இயந்திரமொன்று துரப்பிடித்திற்கொண்டு வருகின்றது. | பொருட்பதிவேட்டில் ஆவனப்படுத்தப்பட்டு உள்ளதுடன், பராதீனத்திற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதென | பொறுத்தமானவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிரிதலே கமநல சேவை செயற்குழுவினால் மண் ஆய்வுகூடமொன்றை ஆரம்பிப்தற்காக ரூபா 486,018 செலவில் கொள்வனவு செய்திருந்த மண் ஆய்வு நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படும் 30 உபகரணங்கள் உருப்படிகள் 18 ஆண்டு அளவு காலம் முதல் விளைவற்று நிலவியன. | பரிசோதனை நடவடிக்கைக்காக பயிற்சி பெற்றுக்கொள்ள பிரதான அலுவலகத்திடம் கோரிக்கை சமர்ப்பித்த்துள்ளதென. | வளங்களை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 4/2012 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் குறிப்பிட்ட கடன் காலத்தை விஞ்சிய கடன் ரூபா 132,236,768 இனை 3064 விவசாய்களிடமிருந்து அறவிட வேண்டியதாக நிலவின. | 07 கடனாளிகலினது உடன்படிக்கைகள் காணாமல் போய்யுள்ளதென.<br>42 பேர்கள் செலுத்தி முடிவடைந்துள்ளதென.<br>206 பேர்களின் விசாரனை மேற்கொள்ளப்பட்டள்ளதென.<br>72 பேர்களை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளதென.<br>315 பேர்களை நியாய சபைக்கு அனுப்பியுள்ளதென.<br>100 பேர்களிடமிருந்த தவணையாக அறவிடப்படுவதென.<br>ஒரு கடனாலியின் பிணையாளியிடமிருந்து அறவிடுவதென. | தீர்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கமநல வங்கியின் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தின் "பெரமக" குழந்தைகள் சேமிப்பு வைப்புக்கள் பேணிச்செல்லும் 06 கமநல வங்கிகளில் 293 கணக்குகள் தமது ஆரம்ப வைப்புகளிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. | சேமிப்புக்களை மேப்படுத்த நடவடிக்கை எடுப்பதென | சேமிப்புக்களை மேம்படுத்துவது தொடர்பில் முறையான வேலை திட்டமொன்று நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (இ) | 05 கமநல வங்கிகளில் ரூபா 1,097,023 ஆன நிலுவை கடனகளிற்குரிதான கடன் உடன்படிக்கைகள் காணாமல் போனதன் காரணமாக அறவிடல் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | மேலதிக செயற்பாடகளை மேற்கொள்ள பிரதான அலுவலகத்திற்கு அனுப்பியள்ளதென. | குறித்த மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | புலஸ்திகம கமநல வங்கியின் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தின் சாதாரண சேமிப்பாளர்கள் 4,588 இடையில் 3,663 வைப்பாளர்களினால் பேணிச்செல்லும் சேமிப்பு கணக்குகளில் ஆரம்ப வைப்புத் தொகையில் தங்கியுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது. | சேமிப்புக்களை மேப்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | சேமிப்பு மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |